**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.30/2023 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | எல்லம்மாள் |
| க/பெ. | பன்னீர்தாஸ் |
| வயது | 55 |
| வசிப்பிடம் | எண்.210, முக்கூந்தம்மன் கோவில் தெரு, நத்தமேடு கிராமம், வெங்கம்பாக்கம், திருக்கழுக்குன்றம். |
| தொழில் | வீட்டு நிர்வாகம் |

**முதல் விசாரணை 26.11.2025**

நான் இந்த வழக்கில் முதல் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 24.07.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. 24.07.2022 தேதியிட்ட மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2. 26.07.2022 தேதியிட்ட பிரேத அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3. FORM AIR (TN-19-AL-3753) சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4. முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பெயரில் தாக்கல் செய்த இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5. சட்டப்பிரிவு மாற்றதல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6. முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஒளி நகல் ம.சா.ஆ.7. முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் ஒளி நகல் ம.சா.ஆ.8. முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி ஒளி நகல் ம.சா.ஆ.9. முதல் மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.10. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.11. 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.12. 4ம் மனுதாரரின் ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.13. முதல் மனுதாரரின் பான் கார்டு ஒளி நகல் ம.சா.ஆ.14. 2ம் மனுதாரரின் பான் கார்டு ஒளி நகல் ம.சா.ஆ.15. 3ம் மனுதாரரின் பான் கார்டு ஒளி நகல் ம.சா.ஆ.16. விபத்தில் இறந்த பன்னீர்தாஸ்

அவர்களின் கல்பாக்கம் அனுமின் நிலையத்திற்கு உள்ளே செல்வதற்கான போட்டோ பாஸ் உரிமம், உரிய அலுவலரால் வழங்கப்பட்டது ஒளி நகல் ம.சா.ஆ.17. 20.01.2023 தேதியிட்ட விபத்தில் இறந்த பன்னீர்தாஸ் அவர்களின் வாரிசு சான்றிதழ் (Online copy) ம.சா.ஆ.18. 31.10.2021 தேதியிட்ட இறந்துபோன பன்னீர்செல்வம் அவர்களின் கல்பாக்கம் நுழைவு அனுமதி சீட்டு ம.சா.ஆ.19 (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**